முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 –வது பிறந்தநாள் செம்மொழி நாளை முன்னிட்டு சென்னை பல்லவன் சாலையில் உள்ள பேருந்து பணிமனையில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் நல உதவிகள் மற்றும் இனிப்பு நல உதவிகளை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார். உடன் மேயர் பிரியா, முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன், சேப்பாக்கம் பிரபாகரன், மாவட்ட தொழிலாளர் அணி எல்.சம்பத்குமார், ஜெயக்குமார், முத்து, ஈடன் ரமேஷ், ஆனந்தன், ஆறுமுகம், சௌந்தர், கங்காதரன், நிர்மல், குருஞானம், கே.வின்சன்ட், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை உலக சுற்றுச்சூழல் தின விழாவில் பங்கேற்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்

காஞ்சிபுரம், ஜூன் 4 - நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை 5ஆம் தேதி காலை நடைபெறும் உலக சுற்றுச்சூழல் தின விழாவில் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் நாளை காலை 9.030 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு அரசின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின விழா ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் நாளை 5ஆம் தேதி காலை 10.30 மணி அளவில் விழா நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை வகித்து சிறப்புரை ஆற்றுகிறார்

இவ்விழாவிற்கு வருகைத் தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை ஜீன் 5ஆம் தேதி காலை 9.30 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இவ்விழாவிற்கு வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### ரூ.12.04 கோடியில் கட்டிடங்கள் திறப்பு! திருப்பெரும்புதூர் ஒன்றியத்தில்

# அண்ணா - கலைஞர் சிலைகள்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கிறார்!

### எஸ்.டி.கருணாநிதி – ந.கோபால் – இரா.சதீஷ்குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூன். 4 திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, திருபெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால், திருப்பெரும்புதூர் நகரக் கழகச் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்லாட்சியில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியத்தில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூபாய் 12.04 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் சிலைகள் திறப்பு மற்றும் கலைஞரின் கனவு இல்லம் 2025 2026 மற்றும் பிரதமந்திரி ஜன்மன் திட்டம் 2024 2025 ஆகிய திட்டப் பணிகளுக்கு பணி உத்தரவு வழங்குதல் மற்றும் ஊராட்சிகளுக்கு ll குப்பை சேகரிக்கும் மின் கல (E.CART) வாகனம் வழங்குதல் நிகழ்ச்சி இன்று (04.06.2025 புதன்கிழமை) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் சிலைகளை திறந்து வைக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை இணை இயக்குனர், திட்ட இயக்குனர் க. ஆர்த்தி, திருபெரும்புதூர் ஒன்றிய குழு துணை தலைவர் மாலதி போஸ்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

எனவே திருப்பெரு ம்புதூர் வடக்கு ஒன்றியம் தெற்கு ஒன்றியம் நகரக் கழக நிர்வாகிகள் ஒன்றியத்துக்கு உட்பட்ட மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, திருபெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால், திருப்பெரும்புதூர் நகரக் கழகச் செயலாளர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. கேக் வெட்டி, இனிப்புகளை வழங்கினார். எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் துரைகண்ணன் ஏற்பாடு தலைமை தாங்கினார். வழக்கறிஞர் ஜி.குணசேகரன் நன்றியுரை கூறினார். அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஏ.சேதுராமன், என்.வேலன்; எழும்பூர் பகுதி அமைப்பாளர் எம்.சந்துரு, பகுதி துணை அமைப்பாளர்கள் எஸ்.சதிஷ், கோஸ்வரன்; எழும்பூர் நீதிமன்ற அமைப்பாளர்கள் எம்.கே.டி.ராஜன், ஏ.இ.சண்முகசுந்தரம் மற்றும் அந்நீதிமன்றத்தைச் சேர்ந்த கழக வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள், பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழக இரு வண்ணக் கொடியேற்றி மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இ.குமரவேல், யு. எஸ்.குறளரசன், எம்.வஜ்ரவேல், டி.சேகர், மு. மாணிக்கவேலன், கே. பவுல், கி. கண்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வேளச்சேரி 176 -வது வார்டில் கலைஞர் பிறந்த நாள் விழா!

சென்னை, ஜூன் 4 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி நேற்று விஜயநகர் முதல் பிரதான சாலையில் வட்ட செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் பகுதிச் செயலாளர் அரிமா சு. சேகர், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே. ஆனந்தம் கலந்துகொண்டு கழக கொடியேற்றி 500 நபர்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பித்தனர்.

இவ்விழாவில் மாவட்டக் கழக, பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள்,பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், மகளிரணியினர், பாக முகவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கழக உடன் பிறப்புகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 104 வது நாள்!

### எழும்பூர் வடக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன் 4 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 104 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (03.6.2026) எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ சுந்தரபுரம் 2) வட்டம் 78 அ சூளை அங்காளம்மன் கோயில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும்,

எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ் நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சொ. வேலு, வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள்: பரிதிஇளம்சுருதி, பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், க.நந்தீஸ்வரன், டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், ஆர். பாபு, வி.விஜய்குமார், வி. அபாய், டி.தயாளன், ந.பாலு, சு.மோகன், ஆர்.எம்.ரங்கநாதன் எழும்பூர் வடக்கு - தெற்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், சு.மனோகர், ஆர்.எம்.ரங்கநாதன், ஆர். பாபு, வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், புனிதா. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர். ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டப் பகுதிகள்!

# துறைமுகம் பகுதி - காமராஜ் நகர் பகுதி மறுகட்டுமானப் பணிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, ஜூன் 4 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (3.6.2025) சென்னை, துறைமுகம் சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டப் பகுதிகளான துறைமுகம் திட்டப் பகுதி (க்ளைவ் பேட்டரி), காமராஜ் நகர் திட்டப் பகுதிகளை மறுகட்டுமானம் செய்வதற்காக மற்றும் சென்னை, துறைமுகம், க்ளைவ் பேட்டரி அருகில் என்னாத்தி மேம்பாலத்தின் கீழ் 4.26 ஏக்கர் பரப்பளவில் தற்காலிக பிராட்வே பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளை நேரில் சென்று களஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

துறைமுகம் சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டப் பகுதிகளான க்ளைவ் பேட்டரி என்று சொல்லக்கூடிய துறைமுகம் திட்டப் பகுதி மற்றும் காமராஜ் நகர் திட்டப் பகுதிகளை முழுவதுமாக அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டு, ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

இந்த திட்ட பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு மறு குடியமர்வு இங்கு வருகின்ற வரையில் வீட்டு வாடகைக்கு உதவியாக ரூ.24,000 அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு அந்த தொகை ரூ.2,000 இருந்தது. இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, ரூ.24,000 ஆக மாற்றியிருக்கிறார். அதோடு, இந்த பகுதியில் உள்ள காமராஜ் நகர் என்று சொல்லப்படும் இடத்தில், 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 14 குடியிருப்புகளும் அகற்றப்பட்டு, மறு கட்டுமானம் செய்து புதிதாக கட்டப்பட இருக்கின்றன. அந்த பகுதியினுடைய கள ஆய்வையும் இன்றைக்கு மேற்கொண்டோம். இந்த பணிகளை விரைவுப்படுத்த, அமைச்சர் என்ற முறையில், இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்த துறையின் செயலாளரும், மேலாண்மை இயக்குநரும், மூவரும் பணி விரைவுபடுத்தும் ஆய்வை இன்றைக்கு களத்தில் வந்து மேற்கொண்டோம். துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பணிகளை விரைவுப்படுத்த உத்தரவிட்டிருக்கின்றோம்.

அதேபோல், வரலாற்று சிறப்புமிக்க ரூ.800 கோடி செலவில் அமைய இருக்கின்ற பிராட்வே பேருந்து நிலையம் ஏற்கனவே தற்காலிகமாக ரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. அந்த பணிகளின் நிலை குறித்தும் இன்று கள ஆய்வு மேற்கொள்ள உள்ளோம். கூடிய விரைவில் அந்த பணியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் தொடங்கப்படும்.

இப்படி, வடசென்னை என்பது புறநகராக இருந்ததை மாற்றி, இன்றைக்கு "வாடா சென்னை" ஆகவும், "வளர்கின்ற சென்னை" ஆகவும் மாற்றும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுதினமும் இந்த பணிகளுக்கான முன்னேற்றத்தையும், புதிய திட்டங்களையும் ஆய்வு செய்து வருகின்றார். அந்த வகையில், 1000 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சித் திட்டம் இன்று ரூ.6,000 கோடியை தாண்டி சென்றுள்ளது. மேலும் கூடுதல் கட்டமைப்புகள் தேவைப்பட்டாலும், முதலமைச்சர் அவர்கள் அதற்கான நிதியையும் ஒதுக்க தயாராக இருக்கின்றார். இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

மறுக்கட்டமைப்பு செய்வதில் உள்ள சவால்கள் குறித்த செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அவர்களின் பதில்:

மறு கட்டமைப்பு என்பது நிச்சயமாக ஒரு சவால் தான். 30, 40 ஆண்டுகளாக ஒரு இடத்தில் வாழ்ந்தவர்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்வது ஒரு சவால். அவர்களின் குழந்தைகளின் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை பாதிக்கப்படலாம். மேலும் குறுகிய சாலைகள், குறைந்த இடவசதி ஆகியவை காரணமாக கட்டுமானப் பணிகளுக்கான ஜல்லி, கம்பி, மணல் போன்றவை கொண்டு வருவது ஒரு சவாலான சூழல். அனைத்து சவால்களையும் சந்திக்கின்ற ஆட்சி தான் திராவிட மாடல் ஆட்சி. இதனை ஒரு சவாலாக ஏற்று, குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டுமான பணிகளை முடிப்பதற்கான முயற்சிகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

வடசென்னை குறைந்த பரப்பளவில் அதிக மக்கள் தொகை வாழும் பகுதியாக இருக்கின்றது. அவர்களுக்கான அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்க தேவையான இடங்களை ஒதுக்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே உள்ளன.

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்படும் வீடுகளின் பரப்பளவை எடுத்துக் கொண்டால், முந்தைய காலங்களில் 200 சதுர அடி அல்லது 275 சதுர அடி வீடுகள் இருந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்த அளவை குறைக்க அனுமதி இல்லை என்று உறுதியாக கூறியிருக்கிறார்.

இப்போது எந்த வீடும் 400 சதுர அடிக்கு குறைவாக கட்டப்படக்கூடாது என்ற உத்தரவின் அடிப்படையில், 400 சதுர அடிக்கு குறைவான வீடுகள் கட்டப்படவில்லை. இந்த 400 சதுர அடியில் ஒரு படுக்கையறை, ஒரு சமையலறை, ஒரு சிறிய பூஜை அறை, வாஷ்ரூம் ஆகியவை அடங்கும்.

200 சதுர அடி எங்கே, 400 சதுர அடி எங்கே என்ற அளவில் இது ஒரு முன்னேற்றம். இந்த பரப்பளவில் கட்டுவதால் ஏற்படும் கூடுதல் செலவைப் பற்றி தமிழக அரசு கவலைப்படவில்லை. மத்திய அரசின் "பிரதமர் ஆவாஸ் யோஜனா" திட்டத்தில் ஒரு வீடு ரூ.1.50 லட்சம் மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால் ஒரு வீடு கட்ட ரூ.17 லட்சம் செலவாகும் நிலையில், மீதித் தொகையை தமிழக அரசு தான் வழங்கி வருகிறது.

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமைப் பொறியாளர் கிருஷ்ணசாமி, கண்காணிப்புப் பொறியாளர் இளம்பரிதி, மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு, மாமன்ற உறுப்பினர் இசட்.ஆசாத், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் பொ.த.மதிவாணன் தலைமையில் பொ.த.எழில்வாணன்,வி.ஜி. மோகன் முன்னிலையில் நடைபெற்றது விழாவில் பகுதி கழகச் செயலாளர் அரிமா.சு.சேகர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார். உடன் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சைதை மேற்கு பகுதி 139 (அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை பகுதி அமைப்பாளர் பூ.பாஸ்கரன் ஏற்பாட்டில் கழகக்கொடியேற்றி 302 பேருக்கு பால் பாக்கெட்டுகளை வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர் வழங்கினார். உடன் களக்காடிஎல்லப்பன், வி.பி.ஜானகிராமன், ஜி.கே.ராமச்சந்திரன், இ.வரதன், ஏழுமலை, பூபதிவெங்கடேசன், கோபால், எழிலரசன் மற்றும் டைலர் சம்பத், பொன்ராஜ், சி.மதியழகன், வேலாயுதம், மனோகர், பிரபுராம், கமால், கிஷோர், உதயஜீவா, அருணாச்சலம், தேஜஸ்வின், சக்தி, நவீன்ராஜ், சக்திவேல், மனோஜ்குமார், லோகேஷ், ரஞ்ஜித் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.